03.10.2024
அ.வ.எண். 114 /2018

டேவிட் (P.W.2)

குறுக்கு விசாரணை :

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் புலியிறங்கியில் வசித்து வருகிறேன். நான் இதற்கு முன்பு வெளிநாட்டில் வேலை செய்து வந்தேனா என்றால் சரிதான். என் மனைவி வெளிநாட்டில் இருந்து வந்துவிட்டார்களா என்றால் வந்துவிட்டார். கிருஷ்ணன் போற்றி மற்றும் சுப்பிரமணியன் போற்றியை தெரியுமா என்றால் தெரியும். கிருஷ்ணன் போற்றி மற்றும் சுப்பிரமணியன் போற்றி ஆகியவர்களுக்கு வழக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் அவர்கள் குடும்ப சொத்து என்ற முறையில் கிடைத்தது. இந்த குடும்ப சொத்தை பாகபிரிவினை செய்திருந்தார்களா என்றால் செய்திருந்தார்கள். இந்த பாகபிரிவினை எப்போது நடந்தது என்றால் சுமார் 40 வருடத்திற்கு முன்பு நடந்தது. அதில் கிருஷ்ணன் போற்றிக்கு எந்த பகுதி கிடைத்தது மற்றும் சுப்பிரமணியன் போற்றிக்கு எந்த பகுதி கிடைத்தது என்றால் கிழக்கு மேற்கு, தெற்கு பக்கம் கிருஷ்ணன் போற்றிக்கும் வடக்கு பக்கம் ஜனார்த்தனன் என்பவரின் தகப்பானருக்கு கிடைத்தது. கிருஷ்ணன் போற்றிக்கு கிடைக்கப்பெற்ற சொத்தின் அளவு எவ்வளவு இருக்குமென்றால் 40 சென்ட் இருக்கும். ஜனார்த்தனின் தகப்பனாருக்கு கிடைத்த சொத்தின் அளவு எவ்வளவு இருக்குமென்றால் சுமார் 40 முதல் 50 சென்ட் இருக்கும். கிருஷ்ணன் போற்றிக்கு வழக்கு சொத்தில் ஏதாவது பங்கு உள்ளதா என்றால் இப்போது பங்கு இல்லை. கிருஷ்ணன் போற்றிக்கு பங்கு வைத்த சொத்தில் பங்கு ஏதாவது உண்டா என்றால் சுமார் 30 முதல் 40 சென்ட் பங்கு இருந்தது. மேற்படி சொன்ன 30 முதல் 40 சென்ட் பங்கு வழக்கு சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் ஜாண்றோஸ் என்பவருக்கும் தெற்கு பக்கம் சானலும் மேற்கு பக்கம் ஜனார்த்தனன் வீட்டிற்கு போகும் பாதை வடக்கு பக்கம் ஜனார்த்தனன் போற்றி என்பவருக்கும் உள்ளது. பாகம் வைக்க பட்ட சொத்தில் கோவில்கள் ஏதாவது உண்டா என்றால் இல்லை. இந்த மொத்த சொத்தின் அளவு 4 ஏக்கர் 10 சென்டிற்கு மேற்பட்டதா என்றால் மேற்பட்டது தான்.

2. 4 ஏக்கர் 10 சென்டிற்கு மேற்பட்ட இடம் தேரேகால் மடத்திற்கு சொந்தமானது என்றால் அங்கு போற்றிகள் வசித்து வந்தார்கள். அது அவர்களுடைய வீட்டுபெயர். நான் சொல்வது போல் அது அவர்களுடைய வீட்டு பெயர் இல்லை என்றாலும் அது மடத்தின் பெயர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்பந்தமாக ஏதாவது விலை ஆவணங்கள் அல்லது கிரய ஆவணங்களையோ, இஷ்டதான ஆவணங்களையோ பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஏதாவது விலை ஆவணங்கள் அல்லது கிரய ஆவணங்கள், இஷ்டதான ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக யாருடைய பெயரில் பட்டா இருப்பதை பார்த்துள்ளேனா என்றால் வாதி பிந்து என்பவர் பட்டா வைத்திருந்தார். பட்டா எப்போது பிந்து என்பவருக்கு கிடைக்கபெற்றது என்பது தெரியுமா என்றால் தேதி தெரியாது. நான் 2018-ல் பிந்து பட்டா வைத்திருந்ததை அந்த இடத்தில் போலிஸ் விசாரணை செய்தபோது பார்த்தேன். வாதிக்கு பட்டா வழங்குவதற்கு முன்பாக விசாரணை ஏதாவது நடத்தினார்களா என்றால் இல்லை. வழக்கு சொத்து உட்பட்ட சொத்து தேரேகால் வேலி மடம் மடத்திற்கு உரிமைபட்ட சொத்து என்றும் கிருஷ்ணன் போற்றி, சுப்பிரமணியன் போற்றி, ஜனார்த்தனன் போற்றி உட்பட்ட பல தலைமுறைக்கு உட்பட்ட போற்றிகள் அம்மடத்தை சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்றும் அவர்கள் அந்த சொத்தை அந்த மடத்திற்காக பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் இந்த மடத்திற்கு சொந்தமான புராதனமான கிருஷ்ணன் திருக்கோயிலும், அதோடு சேர்ந்த துணைகோவில்களும் உள்ளன என்றால் இல்லை. மடமும் மடத்தின் சொத்துகளும் இந்து சமய அறநிலையதுறைக்கு உட்பட்டது என்றால் இல்லை. கோவிலில் பூஜைகள் செய்து வருபவர்கள் போற்றி என்றால் எல்லோரையும் அவ்வாறு கூறமுடியாது ஒருசிலர் தான் பூஜை செய்கிறார்கள். இந்த மடத்தினுடைய சொத்தை இந்துசமய அறநிலைய துறையை தவிர வேறு யாரும் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. யாருமே இந்த சொத்து சம்பந்தமாக கிரயம் ஏற்படுத்தவோ வில்லங்கம் ஏற்படுத்தவோ முடியாது என்றால் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் பல ஆவணங்கள் ஏற்படுத்தபட்டுள்ளதாக சொல்லியுள்ள ஆவணங்கள் எதுவுமே சட்ட அங்கிகாரம் உடையது அல்ல என்றால் சரியல்ல.

3. நானும் வழக்கின் வாதியான பிந்து என்பவரின் கணவர் சதீஸ்குமார் ஆகியோரும் நண்பர்கள் என்றால் சரியல்ல. நானும் மேற்படி சதீஸ்குமாரும் சேர்ந்து வில்லங்கமான சொத்துக்களை குறைந்த விலையில் வாங்கி அதை சரி செய்து விற்பனை செய்யும் நிலபுரோக்கர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தும் சம்பந்தமாகவும் ஒரு டெஸ்ட் ஆவணம் நானும் வாதியின் கணவர் சதீஸ்குமாரும் சேர்ந்து ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல. இந்த ஆவணத்திற்கும் வழக்கின் வாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. லட்சுமி நாராயண சர்மாவுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும் வழக்கு சொத்து சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்த அவருக்கு உரிமையில்லை என்று சொன்னாலும் சரியல்ல. எதற்காக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் காம்பவுண்ட் சுவர் இல்லாததால் அந்த இடத்தை காம்பவுண்ட் கெட்ட பவுண்டேசன் போட தோண்டும் போது அந்த இடத்தில் ஜனார்த்தனன் போற்றிக்கும் வாதியின் கணவர் சதீஸ்குமாருக்கும் தகராறு ஏற்பட்டதால் புகார் கொடுக்கப்பட்டது.

4. போலீஸார் அந்த இடத்தை பார்த்தார்களா என்றால் சானலை பார்த்தார்கள், கோவிலை பார்த்தார்களா என்றால் அங்கு கோவில் இல்லை என்பதால் கோவிலை பார்க்கவில்லை. இந்த வழக்கு சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியாகவோ, பிரதிவாதியாகவோ சிவில் வழக்கு ஏதாவது உள்ளதா என்றால் குடும்ப வழக்கு இரண்டு இருந்தது அது முடிந்து விட்டது. அந்த வழக்கு குடும்ப சொத்து சம்பந்தமாக இல்லை என்றும் வில்லங்க சொத்துக்களை என் மனைவிக்கு தெரியாமல் நான் அவர் பெயரில் வாங்கி வைத்து அதை விற்பனை செய்ய முயன்ற போது ஏற்பட்ட வழக்காகும் என்றால் சரியல்ல.